

# அரும்பு



## வெள்ளிவிழா மலர்

1992 – 2017

இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை



"அமிழ்தினும் இனிய தமிழ் மொழி காப்போம்"

வெளியீடு

...மாணவர்கள்
...ஆசிரியர்கள்
...பெற்றோர்கள்

அரும்பு

# பாடசாலை கீதம்

01

இராகம் :- கல்யாணி

பல்லவி

அமிழ்தினும் இனிய தமிழ் மொழி காக்கும்
இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை வாழியவே
மகிழ்வுடன் அன்னை மொழிதனை பயிலும்
இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை வாழியவே

சரணம்

இரு கரங்கள்போல் தமிழும் நொர்ஸ்க்கும்
இணைந்தே இயங்குவோம் நாங்கள் இங்கே
வரும் காலத்திலும் வாழ்ந்திடத் தமிழை
வளர்க்கும் பணியை செய்வோம் இங்கே
கரும்பாய் இனிக்கும் எம் கலைகளை
கருத்துடன் நாமும் கற்பதும் நன்றே
அரும்புகள் எங்கள் உறவுகள் வாழும்
அன்னை மண்ணுக்கு உதவியும் செய்தே

எண்ணெய் வளமிகு நோர்வே நாட்டில்
எண்ணும் எழுத்தும் கண் என கற்போம்
நுண்ணிய தொழில்நுட்ப மேம்படு அறிவு
பண்ணிய பயன் யாவும் தமிழுக்கு தருவோம்
திண்ணிய அறநெறி உரைக்கும் ஆசான்
கண்ணிய அறிவுரை கேட்டு இங்கே நடப்போம்
மண்ணில் மாந்தர் அனைவரும் சரிசமன்
எண்ணியே ஒற்றுமை காத்திங்கு வாழ்வோம்.

# முகவுரை

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு."**

என்பதனை பறை சாற்றும் வகையில் பல்வேறு இனங்கள் ஒன்று கூடி வாழும் அயலகச்சூழலிலும் தம் தாய் மொழியாம் தமிழ் மொழியையும், அதன் தொன்மையையும் குழந்தைகள் அறிந்திருப்பது இன்றியமையாதது என்ற எண்ணத்துடன் கடந்த 25 ஆண்டுகளாக இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை தன்னார்வலர்களுடன் இணைந்து, தமிழ் கற்றுக்-கொடுத்து வருகின்றது. அத்துடன் பல்வேறு பண்பாட்டு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

கடந்த 25 ஆண்டுகளாக எங்களுடன் உறுதுணையாக இருந்து உதவிய பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகம், மற்றும் நோர்வே அரசாங்கம் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிற்க்கின்றோம். மேலும் இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை பல்லாண்டு சிறந்து வளர்வதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வணங்குகிறோம்!!

நிர்வாகம்
நிர்மலினி உதயமூர்த்தி
சந்திரசேகர் மோகன்
ஸ்ரனிஸ்லோஸ் தேவசகாயம்







# பாடசாலை தரவுகள்

| | | |
|---|---|---|
| அங்கத்தவர்கள் | : | 142 |
| மாணவர்கள் | : | 50 (வயது எல்லை 3 -17) |
| பழையமாணவர்கள் | : | 15 |
| உதவிஅங்கத்தவர்கள் | : | 08 |
| நிதி உதவி | : | அங்கத்தவர்கள் வருடாந்த சந்தா |
| | : | அரச உதவித்தொகை |
| செயற்பாடுகள் | : | தாய்மொழி கற்பித்தல் |
| | : | இதர பாட உதவிகள் |
| | : | கலை, கலாச்சார, விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவித்தல். |
| நேரம் | : | வெள்ளிக்கிழமை பி.ப 05.30 – 07.30 |
| | : | சனிக்கிழமை மு.ப 10.45 – 13.15 |
| இடம் | : | Gauteset skole, Hedde veien 143, Stavanger. |

Vi har som mål å belyse ulike aspekter av tamilsk kultur for barn og ungdom med tamilsk bakgrunn. Med våre verdier og holdninger, ønsker vi å berike mangfoldet i det norske samfunnet.

VISJON

**KUNNSKAP, KULTUR, TOLLARANSE, RESPEKT.**

## Gratulasjon

*Knut Ytre-Arne*

Kjære tamilske elever og foreldre!

Gratulerer med 25 års jubileum!
Gjennom en årrekke har Gautesete skole vært arena for undervisning og aktiviteter for tamilske barn. Hver fredag ettermiddag og lørdag formiddag i store deler av året møtes en engasjert gjeng med barn og voksne til samling på Gautesete skole. Det står respekt av et slikt engasjement, som krever innsats av både barn og voksne etter ordinær skole- og arbeidstid.
På Gautesete har vi arbeidet i et kulturelt og språklig mangfold gjennom mange år. Å bli kjent med ulike kulturer og folkeslag har vært en styrke for oss, og begrepet «trygg i og med to kulturer» står sentralt i skolens praksis. Respekt og toleranse er viktige verdier for å leve i fredelig sameksistens.
Vi ser fram til et fortsatt godt samarbeid.
Til lykke med jubileet og framtiden.

Vennlig hilsen
Knut Ytre-Arne
Rektor Gautesete skole



## Gratulasjon

*Ordfører*

Jeg er stolt over å være ordfører i en internasjonal by som Stavanger, der 22 prosent av innbyggere har en annen bakgrunn enn norsk, og der vi til sammen representerer 181 nasjonaliteter. Det tamilske miljøet har i mange år vært en viktig og engasjert del av den internasjonale byen. Tamilsk Barne- og ungdomsaktivitetssenter gjør en god innsats innen morsmålsundervisning og integrering. Økningen i elevtallet, fra ti elever ved oppstarten i 1992 og til dagens tall, som er 66, viser at senteret gir et tilbud som det er behov for og som mange verdsetter. Lykke til med jubileet og med aktivitetene i fremtiden!

Med hilsen
Christine Sagen Helgø
Ordfører

STAVANGER KOMMUNE
*Er til stede – vil gå foran – skaper framtiden*





# இஸ்ரவங்கர் தமிழ்சிறுவர் பாடசாலை

## நேற்று:

தாய் மொழியை கற்பித்தல் என்ற நல்ல எண்ணத்தில் உதித்ததே இந்த இஸ்ரவங்கர் தமிழ்சிறுவர் பாடசாலை. வணபிதா இருதய நாதரின் முயற்சியில் தமிழ் மொழி கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டு, பின் ஈழ தமிழ் சங்க அங்கத்தவர்களினால் 1992 ஆம் ஆண்டு இஸ்ரவங்கர் மாநகரில் உதயமாகியதுதான் தமிழ் சிறுவர் பாடசாலை. இன்று 25 ஆண்டுகள் சென்ற போதும் அந்த முயற்சியும், ஆர்வமும் குறையாமல் தனித்துவமாக இயங்கி வருகிறது.

“அமிழ்தினும் இனிய தமிழ் மொழி காப்போம்“ என்ற விருது வாக்கியமும் தனக்குரியவர்ணமும் சின்னத்தையும் கொண்ட கொடியுடன் தலை நிமிர்ந்து நிற்பதில் முழுப்பங்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விடா முயற்சியும் கடின உழைப்பும்தான் காரணம்.
பல தடைகளை தாண்டி இன்று 25ம் ஆண்டில் கால் தடம் பதிக்கும் பாடசாலை தமிழ் மொழியை மட்டுமின்றி இயல் , இசை, நாடகம் என்ற முத்தமிழையும் அரங்கேற்றும் நல்லதொரு தளமாக இருந்து வருகிறது.

## இன்று:

இவ்வாறான பல சவால்களையும் வென்று சிறப்பான பாதையில் பயணித்து வரும் மாணவர்களின் எண்ணிக்கை 50ற்கும் அதிகம். இந்நாட்களில் நோர்வே நாட்டுடன் இணைந்து நடைபெறும் தமிழ் மொழித் தேர்வில் எமது மாணவர்கள் தோற்றி வருகின்றார்கள். இத்தேர்வு எழுத்து மற்றும் பேச்சுத்திறன் மூலம் நடை பெறும். இத்தேர்வில் எமது மாணவர்கள் அதிதிறமை சித்தியுடன் சித்தியடைவது பெருமைக்குரியதே.

இலங்கையின் நேசநாடான இந்திய மண்ணின் மைந்தர்களையும் எம்முள் இணைத்து முன்னோக்கி செல்கின்றது இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை.

ஜனநாயக முறைப்படி பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, எமது பாடசாலை பழைய மாணவர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் உதவி அங்கத்தவர்களாக மீண்டும் உள்வாங்கி பாடசாலை முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. இத்தகைய மாற்றம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் ஊக்கத்தினை மேலும் வலுப்படுத்துகின்றது.

நேற்றைய நினைவுகளையும் நாளைய கனவுகளையும் சுமந்து கொண்டு வீறு நடை போடுகின்றது இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை.



## நாளை:

"நாளை நமதே" என்ற எம் அனைவரின் கனவினை நனவாக்கும் படி, இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை உருவாக்கிய இளைய சமுதாயம், பெற்றோர் மற்றும் உதவி அங்கத்தவர்களின் உறுதுணையுடன் பாடசாலையின் வளர்ச்சியில் மேலும் மேலும் பங்கெடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது.

ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி என்ற பெருமையுடன் நின்று கொண்டிருக்கும் எமது பாடசாலையின் வளர்ச்சில் ஒவ்வொரு படிக்கட்டிலும் பலமாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் எங்கள் சிரம் தாழ்ந்த நன்றிகள் பல.

எமது அறிஞர்கள் மற்றும் மூதாதையர்களினால் கட்டியமைக்கப்பட்ட தமிழை நாங்களும் காப்போம் என்று கூறும் எமது பாடசாலை பெருமைக்குரியதே.

இன்று வெள்ளி விழா காணும் எமது பாடசாலையானது, இவர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல கூறுவதுடன், மேன்மேலும் வளர்ச்சியிலும் தங்களது பங்களிப்பை தொடருமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறது. இப்படியாக பல பொன்விழாக்களை காணவிருக்கும் இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலையை மனமார வாழ்த்துகிறோம்.

**"தமிழுக்கு அமுதென்று பெயர் அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் "**





# எமது பாடசாலை

11

நாம் தமிழர்கள். நாம் பேசும் மொழி தமிழ் மொழி. வேற்று நாடுகளில் நாம் வாழ்ந்தாலும் பிற மொழிகளை நாம் பேசினாலும் எமது தாய் மொழியை மறக்கக்கூடாது. எமது தமிழ் மொழியே எமக்கு அடையாளம்.

தமிழின் பெருமையை பேசுவோம்
தேன்மதுர தமிழை சுவைப்போம்
மூத்த மொழியாம் தமிழை போற்றுவோம்
செம்மொழியாம் தமிழை வளர்ப்போம்
வாழ்க தமிழ்

ஆசிரியை: அஜந்தா அயிலன்







# எமது பாடசாலை

**"தேமதுரத் தமிழோசை உலகம் எலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"**

இது மகாகவி பாரதியாரின் கூற்று.
நாம் தமிழ் மழலைகள். எம்மை எமது தாய்மொழியான தமிழ் மொழியில் பேச, எழுத, பாடல்பாட, நாடகம் நடிக்க, நடனமாட, கதைசொல்ல உதவியது நமது தமிழ்ப்பாடசாலையே. எமது தாய் நாட்டில் உள்ளோரையும் வியப்படைய வைத்திருக்கிறது. இவ்வினிய மொழியையும் கலை கலாச்சாரத்தையும் கற்றுத்-தரும் எமது இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலையின் 25வது அகவையை கொண்டாடுவதில் மிக பெறுமையுடன் வாழ்த்துகிறோம்.

ஆசிரியை: பகீரதி புத்திசிகாமணி.





# எமது பாடசாலை

15



**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"**

என எம்மைப் பெருமையுடன் எம் தமிழை உரத்து இந்த உலகில் ஒலிக்க உதவியாய் அமைந்தது எமது இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலையே! ஆய கலைகள் அறுபத்து நான்கில் எங்களால் இயன்ற கலைகளின் அடிப்படையில் எங்கள் சாதனைகளை வெளிக்கொணரும் எம் பள்ளியின் இருபத்து ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவினை வாழ்த்தும் வயதில்லை ஆதலால் வணங்குகிறோம்.

ஆசிரியை: அமுதா கிருஷ்ணசாமி





# எமது பாடசாலை

17



எமது தாய்மொழியாம் தமிழை எமக்கு கற்கும் வாய்ப்பைத் தந்த எமது தமிழ் பாடசாலைக்கு மாணவர்களாகிய நாம் தலை வணங்குகிறோம். நாம் எமது உறவினருடன் உரையாடி மகிழ்வதற்கும் எமது கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும், மரபுகளையும் அறிந்து கொள்வதற்கும் உதவும் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியை கற்பதில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளோம். இதற்கு உறுதுணையாக ஊக்கமளித்து வருகின்ற எமது இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலையின் 25வது நிறைவு ஆண்டினை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

ஆசிரியைகள்: ஜனார்த்தினி சுஜன், டீபனா அல்பொன்ஸ்







# எமது பாடசாலை



இவ் வகுப்பில் படித்து வரும் நாங்கள் அனைவரும் இந்த தமிழ்ப் பாடசாலைக்கு வருவதன் மூலம் தாய் மொழியாம் எம் தமிழ் மொழியை படிப்பதை மட்டுமன்றி தமிழ் கலை-கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அதன் மூலம் தமிழ் கலாச்சாரத்தைப்பற்றி அறிகின்றோம். இதைத் தவிர தமிழ் நண்பர்களையும் சந்தித்து விளையாடுகிறோம். எம்மை ஒரு வீட்டுப் பிள்ளைகள் போல் வாழ்வதற்கு வழி கொடுத்த எம் இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை தனது இருபத்தைந்தாவது ஆண்டினை நிறைவு செய்யும் இவ்வேளையில் நாம் எமது தமிழ் பாடசாலைக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறுகிறோம்.

ஆசிரியை: காஞ்சனா பாலசங்கர்







# எமது பாடசாலை

தமிழினத்தின் பெருமைகளை வெளிப்படுத்தும் அடையாளமாகத் திகழ்வது நம் கலை, கலாச்சாரம், பண்பாடுகளாகும். இவை-களைப் பாதுகாப்பதுடன் இயல், இசை, நாடகமாய் திகழும் நம் முத்தமிழை வளர்க்கவென உருவாகிய "இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை" தொடர் வளர்ச்சி கண்டு இருபத்தைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையிலே பாடசாலை மென்மேலும் வளர்ச்சி கண்டு தனது பணியினை எழிற்சியுடன் தொடர வாழ்த்துவதில் மகிழ்சியும் பெருமையும் அடைகின்றேன்.

ஆசிரியை: அஜந்தா செபஸ்டியன்







# எமது பாடசாலை

நாம் பலதும் பயில விரும்பும் பத்தாம் வகுப்பு மாணவர்கள். இவ்வேளையில் எமது பாடசாலை 25 வது ஆண்டை நிறைவு செய்வது எமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நாம் எமது தாய் மொழியைக் கற்பது மட்டுமன்றி எமது கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றையும் கற்றுக்கொள்கின்றோம். இருவேறு கலாச்சாரச் சூழ்நிலையில் வாழும் நாம் எம்மவர்களின் ஒருமைப்பாடு, பண்புகள் பேணப்படுவதற்கும் தாய்மொழி அவசியமாகின்றது. இப்பாடசாலையைப் பேணி இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைவதற்கு உதவிய நல்ல உள்ளங்களிற்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக! இவ்வாண்டு வெள்ளிவிழாக் காணும் தமிழ் சிறுவர் பாடசாலை மென்மேலும் வளர்ந்து தமது சேவையைச் செய்ய வேண்டும் என மாணவர்களாகிய நாமும். ஆசிரியர்களும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஆசிரியை: உமாதேவி திருலோகநாதன்







# எமது பாடசாலை

25

**"தேமதுர தமிழோசை உலகெலாம் பரவும்வகை செய்தல்வேண்டும்"**

என்கின்ற மகாகவிபாரதியின் கனவு மெய்ப்பட கண்டங்கள் தாண்டிவந்தாலும் நமது மாணவர்களுக்கு நம் தாய்மொழியாம் தமிழை பயிற்றுவித்து அதன் பெருமையை தொடர்ந்து கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டுள்ள நமது பாடசாலையின் தொண்டினை இவ்வேளையில் போற்றிடுவோம்.

தமிழ் என்பது மொழி மட்டும் அல்ல. அது நம் இனத்தின் அடையாளமும் ஆகும். நம் பிள்ளைகளுக்கு தமிழினை பேசு மொழியாக மட்டுமல்லாமல், அதனை செழுமையாக உரைநடை மற்றும் இலக்கணம் வாயிலாக கற்பித்து நம் தாய் மொழியினை வளர்த்தெடுக்கும் நமது இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலைக்கு நமது நெஞ்சார்ந்த நன்றிகளையும், 25ம் ஆண்டு வெள்ளி விழா பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறோம்.

ஆசிரியை: ராமலட்சுமி ரமேஷ்







# எமது பாடசாலை

27

**"அமிழ்தினும் இனிய தமிழ் மொழி காப்போம்"**

எமது தமிழ் சிறுவர் பாடசாலையில் மாணவர்களாக இருந்து தமிழை பயின்றதிலும் ஆசிரியராக இருந்து தமிழை கற்பிப்ப-திலும் மிகவும் பெருமை கொள்கிறோம். ஒரு மனிதன் நிமிர்ந்து நிற்பதற்கு முள்ளந்தண்டு எவ்வளவு அவசியமோ அதே போல் நாங்கள் முழுமனிதர்களாக பெருமையுடன் நிமிர்ந்து நிற்பதற்கு எங்கள் தாய்மொழியாம் தமிழும் முக்கிய காரணம். எங்கள் தமிழ் பாடசாலையில் தாய் மொழியை கற்போம் என்பதைவிட எனது தாயை இன்னும் புரிந்து கொண்டோம் என்பதுதான் உண்மை. அமிழ்தினும் இனிய தமிழ் மொழியை காத்திட நாங்கள் என்றும் எங்களால் இயன்ற முயற்சியை செய்வோம்.

ஆசிரியை: கொலஸ்டிக்கா தோமாஸ்



## உதவி ஆசிரியர்கள்

இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை சமூக வாழ்வியல் கல்வியிலும், செம்மொழியான "அமிழ்தினும் இனிய தமிழ் மொழியினை" நம் இளம் சந்ததியினரிடையே வளர்த்து காக்க வைக்கின்றது.

தமிழ் பண்புகளுக்கே உரித்தான ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சமூக வாழ்வியல் கல்வி அறிவினை ஊட்டி மாணவர்களது ஒளிமயமான எதிர் கால வாழ்க்கைக்கு உரமூட்டும் இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை 25 வது அகவையைப் பூர்த்தி செய்யும் இன்நன்நாளிலே பள்ளியை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

செபஸ்ரியன் தோமாஸ்





அனித்தா ஞானதீபன்





## Leksehjelp


Selv har jeg vært elev på tamilskolen, og av den grunn synes jeg det er kjekt å kunne hjelpe andre elever med fag som jeg tidligere har hatt. Jeg synes tamilskolen gjør en utrolig god jobb med å støtte elever som går på skolen, og synes tilbudet om leksehjelp er et utrolig godt tiltak av dem. Opplevelsen min, både som elev og som lærer på tamilskolen, har vært meget positiv, og jeg håper at leksehjelp-ordningen fortsetter slik det har gjort de siste årene.

Viroshaan Uthayamoorthy



மாணவகர்களின் நலன் கருதி தாய்மொழி கற்பித்தல் மட்டுமல்லாது, இதர பாடங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, உதவி பாட வகுப்பு மூலம் எம் மாணவர்களை முன்னேற்றுவதில் பங்கெடுக்கும் இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாட-சாலைக்கு பாராட்டு கூறுவதுடன் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இச் சேவையா-னது தொடர்ந்திடவும், இவ் 25 ஆம் ஆண்டு விழா போல் பல வெற்றி விழாக்களை காணவும் மனதார வாழ்த்துகின்றேன்.

அயிலன் பரமநாதன்



வாழ்த்து மடல்



**WESTERN TAMIL SCHOOLS FEDERATION**
27 Hill Cross Avenue, Morden, SM4 4AT, United Kingdom
Tel: ++44(0) 208 540 0705 | Email:distancestudy@tamiled.co.uk | web: www.tamiled.co.uk

இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை, நோர்வே.
வாழ்த்துச்செய்தி - வாழ்க ! வளர்க !

பல தலைமுறைகள் வாழ்ந்த தாய் நிலத்தை விட்டுப் பிரிந்து, உலகத்தின் பல நாடுகளிலும் வாழ்ந்து வரும் எமது இன மக்கள் தமது விழுமியங்களை மறவாது பேணும் நோக்கத்துடன் ஆரம்பித்த நிறுவனங்களில் தாய்மொழி கற்பிக்கும் கலாசாலைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. மிகவும் தொன்மை வாய்ந்த எமது தமிழ் மொழியின் பெருமையை அறிந்த சான்றோர்கள், அதன் மேன்மை வாய்ந்த சிறப்புகளை எமது வருங்காலச் சந்ததியினரிடம் சென்று சேர்க்க வேண்டிய கடப்பாட்டினை உணர்ந்து செயற்படுவது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.
நோர்வே நாட்டில் கலாசார, சமூக, காலநிலைச் சூழல் போன்ற பல சவால்களுக்கு முகம் கொடுத்து, தொடர்ந்து 25 ஆண்டுகளாக இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை தமிழ் இனத்திற்கு சேவை செய்து வருகின்றது என்பதனை அறியும் போது வியப்பால் பூரிக்கின்றோம்.



இந்த ஆண்டு இஸ்ரவங்கர் தமிழ்ப் பாடசாலை தனது இருபத்தைந்தாவது அகவை நிறைவைக்கொண்டாடுகின்றது என்பதனை அறிந்து நாம் மன மிக மகிழ்கின்றோம்.

தமிழர் எனும் உணர்வு ஓங்க மிகவும் பெருமை கொள்வதுடன், நோர்வே நிலத்தில் தமிழ் பாடசாலையை இத்தனை வருடங்களாக இயங்க வைத்த, வைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், செயற்பாட்டாளர்கள் யாவருக்கும் எமது அளப்பரிய பாராட்டுக்களை முன் வைக்கின்றோம்.

மேன் மேலும் பல்லாண்டுகள் மிகவும் சிறப்புடன் தமிழ் மொழியினைப் பரவிடச் செய்யும் பணியில், இஸ்ரவங்கர் தமிழ்ப் பாடசாலை தொடர்ந்து வளர்ச்சி பெற்றுத் தொண்டாற்ற, மேற்குலகத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியத்தின் சார்பில் பல்லாயிரம் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

கந்தசாமி மனோகரன் ஆ.யு
மேற்குலகத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம்.

**Trustee:** Rev.Fr. S. Xavier ▪ **President:** Mr.K.Manoharan ▪ **Vice president:** Mr. M.T.Selvarajah ▪ **Registrar:** Mr. Joseph Vilvaraj ▪
**Committee members:** Mr. K. Jegatheeswarampillai | Mr. S. Ganeshalingham |Mr. S. Murugaiah |
Mr. N. Sivasothy ▪ **Honorary Coordinator** | Dr. R. Chandrasekaran ▪ **Honorary Advisers:** Mr. N. Satchithanathan |
Dr. Lincoln V Rasalingam | Venerable Dr. Kumaraswamy Thambiran
WTSF is a subsidiary of Tamil Educational and Cultural Association, Charity reg. no:1107377 In England and Wales.

# பழைய மாணவர்கள் வாழ்த்து

Tidligere elever ved Tamilske barn og ungdom aktivitet senter.

Først og fremst ønsker vi å gratulere Tamilske barn og ungdoms aktivitets-senter, som feirer sitt 25-årsjubileum i år. Senteret, som vi kjenner best som «tamilskolen», har siden 1992 bidratt til å ivareta tamilers kulturelle interesser i Stavanger.

Som tidligere elever, har vi gjennom barndommen og ungdomstiden vår, tilbrakt atskillige lørdager på tamilskolen. Det å gå på tamilskolen var ikke et reflektert valg på den tiden, men i ettertid innser vi hvor mye vi har lært – ikke bare med tanke på språkopplæringen, men også den betydningen skolen har hatt i så mange andre aspekter i livene våre.

Det mest åpenbare læringsutbyttet fra tiden på tamilskolen er de språklige ferdighetene. For oss som er født i Norge med tamilske foreldre, blir morsmålet vårt automatisk antatt for å være tamilsk. På sett og vis har vi fått det tamilske språket gjennom morsmelken; våre første ord var "amma", "appa", "akka" og "anna", ikke "mamma", "pappa", "søster" og "bror".

Tamilsk var altså det første språket vi lærte, men norsk overtok raskt som det språket vi kunne best. Det er ingen tvil om at det var nødvendig med system-





atisk arbeid for å oppnå gode lese- og skriveferdigheter i tamilsk – et klassisk språk med en litterær tradisjon som strekker seg over 2000 år bak i tid – og dette fikk vi gjennom tamilskolen.

Tamilskolen ga oss også en arena for å utvikle våre kulturelle og kunstneriske evner. Hvert skoleår på tamilskolen ble avsluttet med en avslutningsfest, hvor hver klasse, eller flere klasser i samarbeid, fremførte ulike kulturinnslag: sang, dans, diktopplesning, paneldebatter og skuespill. Noen av våre beste minner fra tamilskolen kommer fra arbeidet med avslutningsfestene.

Vi har gjennomført mangfoldige innslag på scenen i løpet av våre år som elever. Vi har spilt bier, vi har spilt regndråper, vi har spilt konger, og vi har spilt guder. Gjennom de klassiske skuespillene vi spilte i lærte vi ikke bare språk, men også historie og religion. Gjennom de moderne skuespillene lærte vi viktige verdier som samhold og likeverd.
Vi husker at tiden før avslutningsfestene var hektisk og utfordrende, med mange øvinger i forkant. Samtidig frembrakte avslutningsfestene et fantastisk fellesskap av elever, lærere og foreldre som jobbet sammen mot et mål. Alle involverte, fra manusforfattere, koreografer til kostymeansvarlige, viste en beundringsverdig dugnadsånd. Denne holdningen til frivillig og hardt arbeid er noe vi har tatt med oss videre i livet vårt etter endt skolegang.

Der og da skjønte vi kanskje ikke hvorfor vi skulle lære disse eldgamle diktene og skuespillene. I dag kan vi sette pris på at vi fikk et innblikk i den rike tamilske kulturarven og tradisjonsrike kunstformene, og har i ettertid ført til enda større interesse for kulturen vår.

Gjennom sceneopptredenene på tamilskolen fikk vi også god trening i muntlig fremføring. Selvsikkerheten som kommer fra å ha stått på scenen og motta applaus for noe du har jobbet med, er noe vi har dratt nytte av ved presentasjoner og muntlig aktivitet i den norske skolen.

I tillegg til å være en kulturinstitusjon, er det viktig å huske på at tamilskolen har vært en viktig møteplass for norsk-tamiler i Stavanger. Vi har stiftet varige vennskap og bekjentskap. Alle barn av innvandrere har nok kjent på følelsen av at verken norske venner eller våre tamilske foreldre forstår oss fullt ut. I de stundene har det vært fint å søke støtte hos andre jevnaldrende norsk-tamiler som står i de samme utfordringene som oss selv. Hvis vi snakker med andre unge norsk-tamiler som er oppvokst i andre byer, har de hatt mange av de samme opplevelsene på andre tamilskoler. På den måten blir tamilskolen et viktig sted for å skape samhold og utveksle erfaringer.

Som det første avgangskullet til tamilskolen har vi på mange måter vært prøvekaniner for lærerne våre. Vi har hatt både seriøse lærere og hatt tøysete lærere gjennom skolegangen. Noen styrte klasserommet med jernhånd og lærte oss disiplin. Andre lærere var mer opptatt av å knytte bånd og ta viktige samfunnsdebatter i klasserommet. På fredagskvelder og lørdagsformiddagder kom vi sammen for å lære tamilsk, få leksehjelp, og sist men ikke minst for å ha det gøy sammen.

Det har altså gått 25 år siden noen ildsjeler startet opp Tamilske barn og ungdoms aktivitetssenter for å prøve å bevare den kulturen de tok med seg da de flyttet fra Sri Lanka. Gjennom disse årene har tamilskolen gjennomgått både små og store endringer. Mye har også endret seg i livene våre fra vi startet på tamilskolen til vi sluttet. Tamilskolelærerne våre har sett oss gjennom trassalder og ungdomsopprør. Gjennom disse endringene var lørdagene på tamilskolen var noe som var fast og trygt i livene våre, og dette er noe vi verdsetter i dag.




Statistikken viser at tamiler er godt integrerte i samfunnet, og barna har et høyt utdanningsnivå. Bak disse resultatene ligger mye hardt arbeid, og vi vet at foreldrene og lærerne våre har måttet overkomme mange utfordringer for å få oss dit vi er i dag. Gjennom de voksne på tamilskolen så vi at vi kunne lykkes i det norske samfunnet hvis vi stod på og jobbet hardt.

Det blir ofte et fokus på akademiske og karrieremessige prestasjoner når vi snakker om hvor vellykket integreringen er. Det er viktig å ikke glemme at god integrering ikke bare handler om å være en del av, og bidra til det norske samfunnet. Det handler også om ikke å glemme sin egen kultur, og å lære seg å bruke den flerkulturelle bakgrunnen til egen fordel. Her ser vi at tamilskolen har en viktig rolle å spille også fremover, selv om framtidsutsiktene kanskje er litt usikre.

Til slutt ønsker vi å uttrykke for takknemlighet overfor våre foreldre, lærere, leksehjelpere og ledelse ved tamilskolen, som har viet tiden og ressursene sine til oss. Kunnskapen og erfaringene fra tamilskolen har gjort oss bedre rustet for å møte de ulike utfordringene som vi møter i våre (flerkulturelle) liv. Tamilskolen har bidratt til å forme oss til å bli de menneskene vi er i dag, og dette er noe vi alltid kommer til å sette pris på. Tusen takk.

Hilsen fra tidligere elever ved Tamilske barn og ungdom aktivitet senter
Kirisanth Devasagayam
Casthory Jeevaharan
Gayatri Jeevaharan
Sabesan Jeyarajah
Puvanesan Jeyarajah
Jeyaprian Sebastian
Tharani Rita Sebastian


பாலர் பிரிவு
பிரிவு: 1
பிரிவு: 2
பிரிவு: 4-5
பிரிவு: 6-7


பிரிவு: 8-9
பிரிவு: 10
பிரிவு: 11
மேற்பிரிவு

# ஆசிமடல்

கல்தோன்றி மண்தோன்றாக் காலம் முன்தோன்றி முன்நிலை பெற்ற தமிழ். சேர, சோழ, பாண்டிய மன்னர் வளர்த்த தமிழ். முதல், இடை, கடைச் சங்கங்களில் முத்தாய் ஒலித்த தமிழ். செம்மொழி என்ற இத்துணை சிறப்புக் கொண்ட எம் தமிழை நோர்வேயில் "இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை" என்னும் பெயர் சூடி கடல் கடந்தும் எம்மொழி அழியா நிலையில் சிறப்புடன் வாழ வேண்டும் என்று இப்பள்ளியை உருவாக்கிய நல்ல எம் உறவுகள் சிறப்புடன் வாழ்க. இப்பள்ளிக்கும் எனக்கும் நீண்ட நெடிய வரலாறு உண்டு. பள்ளி நிர்வாகிகள், ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், பிள்ளைகள், பாடசாலை நலன் விரும்பிகள் அனைவரும் நலம் பெற்று வாழ்க. ஆல்போல் ஓங்கி அறுகு-போல் வேர் பரப்பி பல்லாயிரம் நூற்றாண்டு பார் போற்ற, பாவலர் நா போற்ற வளர்க. பல நூறு சிறார்கள் மென்மேலும் பலன் பெற இப்பாடசாலை மேல் ஓங்கி வளர வேண்டும் என்று நிறை மனம் கொண்டு வாழ்த்துகிறேன்.

"வாழ்க தமிழ் பள்ளி வாழ்க தமிழ் பள்ளி"
வாழிய வாழிய வாழியவே
இஸ்ரவங்கர் தமிழ் பள்ளி சிறுவர் தமிழ் பள்ளி
என்றேன்றும் வாழிய வாழியவே
முத்தமிழ் போதிக்கும் முத்தான இப்பள்ளி
வான் தொட வளரட்டும் வாழியவே
எங்கள் தமிழ் பள்ளி சிறுவர் தமிழ் பள்ளி
என்றென்றும் வாழிய வாழியவே

செல்வரெத்தினம் (செல்வா)
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)





"அமிழ்தினும் இனிய தமிழ் மொழி காப்போம்"


**Tamilsk Barne og Ungdomsaktivitetssenter**

Email: tamilskolen.stavanger@gmail.com

Address: Postboks 1048, 4095 Stavanger.

stavanger-tamilskole.com